முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 || 25–1–57 வெள்ளி | ஒலி 42

தேர்தல் களத்தில் தி. மு. க.!



இதுவா சோஷலிசம்?

★★★

"இங்குள்ள அந்நியர் தொழில்களை தேசிய மய மாக்க நாம் முயற்சி செய்தால் சர்வதேசத் துறையில் நமக்குள்ள நல்ல பெயர் கெட்டுவிடும். அந்நிய நாடுகளின் நம்பிக்கையை இழந்து விடுவோம்!"

—ஒரு கடைந்தெடுத்த பிற்போக்கு வாதியின் பேச்சல்ல, இது!

ஒரு சோஷலிசத்தின் எதிரி அந்நிய முதலாளிக்குக் கொடுத்த அபயக் குரலுமல்ல!

சோஷலிச 'மாதிரி'க்காரராம் பண்டிதர்தான் இவ்வாறு பேசியிருக்கிறார்!

முதலாளிகள் என்ற நோக்கிலே பார்க்கும்போது உள்நாட்டு முதலாளி; வெளிநாட்டு முதலாளி என்ற பாகுபாட்டிற்கு இடமென்ன இருக்கிறது?

பெயர் கெட்டு விடும் என்கிற ஒரே காரணத்திற்காக அன்னிய முதலைகளை நமது பொருளாதார ஓடையிலே தவழ்வதற்கு அனுமதியளிக்கலாமா?

—இந்த உபகண்டத்திலே 'சோசலிசபாணி' ஏற்படுத்தப் போவதாக உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் பண்டிதர் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில் தராமல் அந்நிய முதலாளிகளை அணைத்து முத்தங்கள் ஆயிரத்திற்குச் சமானமான பாகுமொழிகளை உதிர்த்திருக்கிறார்!

முக்கிய தொழில்களை தேசிய மயமாக்கியே தீருவேன்! அதுவே எங்கள் சோஷலிச பாணியின் தலையாய நோக்கம் —என்று முரசறைந்தார்!

ஆம்; ஆம்! அதுவே சரி—என்று தலையசைத்தார்கள் அவரது சீடகோடிகள்!

—இன்றோ: அந்நிய முதலாளிகளே! உங்களுக்குப் பூரண விடுதலை கொடுத்து விட்டோம்! நீங்கள் ஏழைப் பொதுமக்களைச் சுரண்டிக் கொழுப்பதை நாங்கள் எக்காரணம் கொண்டும் தடுக்க மாட்டோம்! நீங்கள் பகற் கொள்ளையைப் பகிரங்கமாக நடத்துங்கள்! பாரதத்தை வேட்டையாடுங்கள்! — என்று அவர்களுக்குப் பூரண விடுதலை வாங்கித் தந்திருக்கிறார் அலகாபாத் வீரர்!

பண்டிதரின் பேச்சைக் கேட்டு: ஆவடியின் தீர்மானத்தைக் கண்டு; இந்த நாட்டிலே பொருளாதார சமத்துவத்தை காங்கிரஸ் செய்து முடிக்கும்—என்று பெருமைப்பட்ட நண்பர்களே! பம்பாய் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைக்கும்போது பண்டிதர் பேசியதை ஆழ்ந்து கவனியுங்கள்!

அந்நிய முதலாளிகளின் தொழில்களை தேச உடமையாக்கமாட்டோம்!

இப்படிச் செய்தால் வெளி நாட்டிலே நமது பெயர் கெட்டுவிடும்!

—ஆவடித் தீர்மானத்தைப் படித்த வாய் பச்சை முதலாளித்துவ வாடை வீசும் இந்த வாசகங்களையும் உதிர்த்திருக்கிறது!

வெளி நாட்டில் பெயர் கெட்டுவிடுமாம்! அதற்காக அந்தந்த நாட்டு முதலாளிகளை அனுமதிக்கிறாராம்!

வேடிக்கை; வேடிக்கை!

உள் நாட்டிலே வளம் பொங்கவேண்டும்; நிலம் தழைக்க வேண்டும்; அசுரத்த முதலாளிகளின் கொள்ளை வேட்டை தடுக்கப்பட வேண்டும்-என்பதிலே அக்கரை கிடையாதாம்!

எந்தப் பணியும்; எந்தத் திட்டமும்; எந்த முயற்சியும் வெளிநாட்டிலே என்ன பெயரைத் தேடித் தரும்? இப்படிச் செய்தால்; இன்னின்னவற்றைச் செய்யாமல் வேறு பலவற்றைச் செய்தால் வெளி நாட்டில் தன்னை நல்லவர்; உயர்ந்தவர்; உத்தமர் என்று நினைப்பார்களா?—என்பதிலேயே கருத்தாயிருந்து வெளிச்சம் தேடி விழுந்து உயிர்விடும் விட்டிலின் நிலையிலே புகழ்தேடி; சோஷலிசக் கொள்கைக்கு இகழ்தேடி வைக்கிறார், பண்டித நேரு!

பண்டிதரின் பம்பாய்ப் பேச்சு காங்கிரசை ஒரு சோஷலிசக் கொள்கைமீது பற்றுடைய இயக்கம் என்றுகூட அல்ல; அன்னிய முதலாளிகளின் அடிமை; வெளிநாட்டில் தங்கள் பெயரை வைத்தே உள்நாட்டில் பணிபுரியும் கோழைகளின் கூடாரம்; ஏழைகளின் எதிரி—என்றுதான் அறிமுகப்படுத்தி வைக்கிறது!

★ மலர் மணம் நுகர்ந்தோர்! ★



● ...பக்கங்கள் குறைவுதான்; எனினும் எந்தப் பக்கமும் படங்களுக்கு—நல்ல அழகிய விசாலமான; மூவர்ணப் படம் என்னும் சொல்லுக்குப் பொருளாக விளங்கும் கண்ணாடி போட்டு மாட்ட வேண்டிய படங்களுக்குச் சிறிதும் குறைச்சலில்லை! கட்டுரைகள் அனைத்தும் எண்ணச் சுரங்கங்கள்! மலரின் பருமனைத்தான் குறைத்திருக்கிறீர்களே தவிர கருத்தாழத்தைப் பல மடங்கு அதிகரித்திருக்கிறீர்கள்!

—வி. நீலமேகம்,
அண்ணாமலை நகர்,

● ...குறித்த காலத்தில், குறைந்த விலையில், நிறைந்த பயனுள்ள மலர் வெளியிட்டதற்கு நான் மட்டுமல்ல; இந்தத் தென்னகமே பாராட்டுமென்பதில் ஐயமில்லை! ஆனால் ஒரே குறை; இந்த எழில் மலர் மங்கையை என் நண்பர்களான விடாகண்டர்களிடமிருந்து எப்படிப் பாதுகாப்பது என்பதே என் முன்னுள்ள இன்றைய பிரச்னையாகும்!

—க. வெற்றிவேந்தன்,
கோவை.

● ...மலர் பிரமாதம்! இதைத் தவிர வேறு எதுவும் எனக்குக் கூறத் தெரியவில்லை.

—எச். ஏ. கான்,
வந்தவாசி.

● ...சென்ற ஆண்டு தென்னகத்தின் பெருவீரன் இராவணனின் காதையை அளித்தீர்கள். மகிழ்ந்தோம். அவன் மட்டும்தானா? இதோ ஒரு வீரன், என இரணியனை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். தளபதி அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், இவர்களின் உருவம்தான் என்னே! ஆயின் ஒரு குறை; தங்களின் உருவத்தை வண்ண ஓவியமாக அளித்திருக்கலாம்!

—இராமையன்,
கடலூர்,

● ...தென்னாடு பிரியாவிட்டால் தென்னவர்கள் சிறப்பாக வாழ முடியாது என்பதை "திராவிடத்தின் உலகத் தொடர்புகள்" என்னும் கட்டுரையில் ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களும், 'நனவாக வேண்டிய கனவு" என்ற கட்டுரையில் துணை ஆசிரியர் மாறன் எம். ஏ., அவர்களும் அருமையாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

—பா. நடராஜன்,
கோவை.

● ...மாதவன் அவர்களின் முகப் போவியமே என் மனதைக் கவரும்படியாக அமைந்துள்ளது! அதுதான் பண்டைய திராவிடரின் வீரப் பெருவாழ்வை —வெற்றி குன்றாப் புதுவாழ்வை —தன்மானமிகுத் தமிழகத்தின் தவ வாழ்வை — நமது கண்முன்னே கொண்டு வந்து காட்சியாகக் காட்டுகிறது!...... அறிஞர் அண்ணா அவர்கள் கூறுவது போல, என் போன்ற இளைஞர்க் கெல்லாம், "முரசொலி ஓர் போர்வாள்!"

—டி. என். வி.,
அத்திக்கடை.

● ...நம் அண்ணனும் அண்ணியும் நாங்கள் இதுவரையிலும் காணாத காட்சியாகும். மு. க. எழுதிய "இரணியன்" கவிதை, ஆரியத் தால்மறைக்கப்பட்ட உண்மைச் சம்பவம்.

—சி. சு. தேவராசன்,
சிறுதையூர்.

● ...இவ்வருட பொங்கல் மலர் முரசொலியின் மேன்மையை உயர்த்தத்தக்க முறையில் உள்ளதைக் குறித்து நான் மிகவும் அகமகிழ்ந்தேன்.

—கே. ஏ. தாஸ்,
சென்னை—10.

● ...மலர் கண்டேன்; மனம் மகிழ்ந்தேன். ஆரிய ஏடுகள் அங்கலாய்க்கும் முறையில் அமைந்திருக்கின்றது. அண்ணா, நெடுஞ்செழியன், சாமி. மற்றுமுள்ள நிழற்படங்கள்—இந்த ஆண்டில் வெளி வந்ததைப் போல் எந்த ஆண்டும் வந்ததில்லை. மு. கருணாநிதி அவர்களின் இரணியன் கருத்துக்கு விருந்து......'நெருப்பு' நன்றாக இருக்கிறது.

—இராசசேகர்,
நுங்கை.

● ...தேர்தல் வேலையிலேயே ஈடுபட்டிருக்கும் தாங்கள் எங்கு 'முரசொலி' பொங்கல் மலர் வெளியிடாமல் இருந்து விடுவீர்களோ என்று பயந்தேன். ஆயினும் மலர் கிடைத்தது. மகிழ்ச்சி அடைந்தேன், ஆனால், மலரைக் கண்டவுடன் படிக்கவே மனம் வரவில்லை. காரணம், இன்று படித்துவிட்டால் நாளை என்ன செய்வது என்றுதான். மாதம் ஒரு பொங்கல் பெருநாள் வராதா என்ற எண்ணம் ஏற்படுகிறது.

—ஏ. ஹக்கீம்,
அரகண்டநல்லூர்.

● ... அறிஞர் உலகம் நல்ல தொகுப்பு!

—கோகுல்,
நாகை.

சென்னை 25-1-57 வெள்ளி

களத்தில் கழகம்!

உதித்து விட்டான் செங்கதிரோன், தென் திசையில்; ஆமாம், தென்னகத்தில்!

கொழித்துவிட்ட உமிகள்போல்; அழுத்திவிட்ட புழுவைப் போல் திருவிடத்தை வளைத்து நிற்கும் வன்நெஞ்சர்களின் வருங்காலத்தைக் கணிக்க; கருத்துக் கதிர்களைத் தந்து குருட்டறிவை விரட்ட; குள்ள நரிகளின் குரல்வளையை நெறிக்க; உள்ளத்தால் ஒருவராய்; மற்றுடலால் பலராய்க் காணும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே குதித்து விட்டனர்!

எரிமலை முகப்பிலே நின்று அணு அணுவாகச் சிதைந்து வரும் ஜனநாயகம் இருகையேந்தி வரவேற்கிறது; மக்கள் நலன் கருதுவோர் நம் முடிவுகண்டு பூரிக்கின்றனர்! எதிரிகள் தடுமாறுகின்றனர்! துரோகிகள் திணறுகின்றனர்!

அறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து கலனாகி வரும் காங்கிரஸ் கோட்டையைச் சாடுகிறார்!

நாவலர் நெடுஞ்செழியன் சேலத்திலிருந்து வெறிக்கோலம் பூண்டிருக்கும் 'ஒரு கட்சி சர்வாதிகாரத்திற்கு'ச் சவக்குழி தோண்டுகிறார்!

கழக முன்னணி வீரர்கள் அனைவரும் ஒவ்வொரு முனையிலிருந்தும் 'உதய சூரியனா'க சட்டசபையில் நுழைவதற்குத் தயாராகி யிருக்கின்றனர்!

பாராண்ட பைந்தமிழனே; இன்று நீ பரதேசிக் கோலத்தில் திரிவது ஏன்? தேர் உருண்ட உந்தன் வீதிகளிலே வறுமைத் தேள் கொட்டி, நீ உருளுவதேன்? வாள் ஓங்கிய உன் கரங்கள்; வேல் தொட்ட உன் விரல்கள் வடவன் தாள் தொழுது கிடப்பது ஏன்?—என்று வினாக்கள் ஆயிரம் வெடித்துச் சிதறிட ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை துவங்கிவிட்டது!

புலி—வில்—கயலை நினைத்தபடி இன்று எலியாக வாழ்ந்திடுவோர் உரிமைக் கீதமிசைக்கும் கிளியாக மாறிவிட்டனர்! பலியாகக் கால், கைகள்; உடல், தலைகள் கொடுத்தது போதும்; இனிப் பலியாது உமது வேஷம்—என விழித்துக் கொண்ட தென்புல மாந்தர் சங்கெடுத்து முழக்குகின்றனர்!

ஒன்பது ஆண்டுகள்! அப்பப்பா; எவ்வளவு கொடுமைகளை; அநியாயங்களை; அக்ரமங்களைத் தாங்கியிருக்கிறோம் இந்தக் காங்கிரஸ் ஆட்சியிலே!

வேலை கிடைக்கவில்லையே—என்று வீதியிலே அலைந்தான் குடும்பத் தலைவன்!

உலைப் பானையிலே இடுவதற்கு அரிசி இல்லையே; அவ்வளவு அதிகவிலை தரமுடியவில்லையே—என்று அழுதாள் குடும்பத் தலைவி!

உலகத்தின் தலைமொழியாம் தமிழ் கற்க இடமில்லையே; இந்தி வந்துவிட்டதே—என்று சிந்தை அணு ஒவ்வொன்றும் நைந்திட வாழ்ந்தான் குடும்பச் சிறுவன்!

—தென்னகத்தின் மனித ஜந்துக்கள் அனைவருமே நேரடியாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர், இந்தக் கோணல் நடத்தைக்காரர்கள் ஆட்சியிலே! குடும்பம் குடும்பமாக அவதிப்பட்டிருக்கிறது இந்தக் கொடுமைமிக்கோர் துரைத்தனத்திலே!

• காரணம் என்ன?

எம்மைத் தட்டிக் கேட்க யார் இருக்கின்றனர்—என்ற மமதையிலே வாழ்ந்தது ஆளும் கட்சி! யார் இருக்கிறார்கள் நம் குறைகளை எடுத்துச் சொல்ல—என்னும் அவசியத்திலேயே இருந்தது மக்கள் மன்றம்!

யாரே; எமக்கு நிகர் யாரே—என்று ஒப்பாரும் மிக்காரும் இலர்போல்; அலட்சியபுரியிலே பீடு நடை போட்டு வந்தது செங்கோல் ஏந்திகளின் கூடாரம்!

கேட்பவர்கள் யாரும் இருக்கவில்லை; எனவே அவர்கள் பதில் சொல்லும் பண்பையே இழந்து வாழ்ந்திருக்கின்றனர், இதுவரையில்!

வட நாட்டு அரசினை எதிர்ப்பது பாவமென்று கருதினர்; டெல்லியை எதிர்த்து வாயைத் திறந்தால் வம்பு என்று வாழ்ந்தனர்!

—அத்தகைய 'மௌன நிலைமை'யைப் போக்கி; இந்த நாட்டிலே எதிர்க்கட்சிக்கு ஒரு மகத்தான இடத்தைப் பெற்று; உதவிக்காக வேறு திசையைப் பார்க்காமல் 'நமக்கு நாமே' என்னும் உன்னதக் கொள்கையைக் கொண்டு; தென்னகத்து அரசியல் வரலாற்றிலே ஒரு திருப்பு மையத்தை ஏற்படுத்துவதற்குத்தான் நாம் நமது முதல் நடவடிக்கையை எடுத்திருக்கிறோம்!

பணமில்லை நம்மிடம்; ஆனாலும் மக்களை வாழ வைக்கும் குணமிருக்கிறது!

செப்புக் காசுகள் கிடையாது; ஆனால் ஒரு செப்புக்காசு கூட வட சீமைக்கு அநியாயமாகச் செல்ல முடியாது—என்று செப்பிடும் துணிவு இருக்கிறது!

வான வேடிக்கைகள் காட்டி; ஏமாந்தவர்கள் கவனத்தைத் திருப்பும் தந்திரம் இல்லை நம்மிடம்; ஆனால் மான உணர்ச்சி இருக்கிறது!

அதனால்தான் தாயகத்தின் ஊனம் அகற்ற மக்கள் தொண்டனாக தி. மு. கழகம் இன்று பெருமிதத்தோடு வலம் வர முடிகிறது!

தென்புல மாந்தரே! உங்கள் கண் நிகர் கழகம் உங்களுக்காக உங்களை நாடி வருகிறது! மண்ணும் பொன்னும் நமக்கு மட்டுமே நலன்தர; எண்ணும் எழுத்தும் என்றும் நம் மொழியிலேயே நம் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கப்பட; தலையாய நோக்கத்துடன் தலைவிரி கோலமாய் இருக்கும் ஜனநாயக நங்கையின் முகத்திலே சிரிப்பு காண செந்தமிழ்ப் பூக்காடாம் தி. மு. கழகம் புறப்பட்டு விட்டது!

திருவிடத்தின் உரிமையாளர்களே! உங்களையே நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டு தக்க பதில் காண வேண்டிய நேரம் அரும்பி விட்டது!

இந்த நாட்டில் உண்மை ஜனநாயகம் மலர வேண்டுமா? வேண்டாமா? உடமையை வடவருக்கு ஈந்த அடிமைகளாய் இந்த நாட்டார் இருக்கலாமா? கூடாதா?

இழி செயல்களும்; ஈடில்லாக் குறைகளும் இந்த நாட்டு அரசியலில் இருப்பதா? அழிவதா?-என்பதை இப்போதே முடிவு செய்யுங்கள்.

எது வேண்டும் உங்களுக்கு?

நன்மையா? தீமையா?

அடக்கு முறையா? அடக்கமான முறையா?

கொலைத் தொழிலா? குணச் செயலா?

கொடுங்கோலா? செங்கோலா?

வெறிக் குணமா? விசுவாசத் தன்மையா?

ஊழலா? உண்மைச் செயலா?

இருட்டா? உதயமா?

—தென்னகத்து மாந்தரே; இதற்கு முடிவு காணும் மகத்தான பொறுப்பு உங்கள் முன்னே நிற்கிறது!

நேர்மையின் பால் உங்களுக்குள்ள நாட்டத்தையும்; உண்மை ஊழியரைத் தேர்ந்தெடுப்பதிலே உங்களுக்குள்ள திறமையையும் நம்பியே திராவிட முன்னேற்றக் கழகம் இன்று தேர்தல் களத்திலே இறங்கியிருக்கிறது! அவர்களுக்கு வெற்றி தேடித் தருவதிலேதான் உங்கள் வளமான வருங்காலமும் அடங்கியிருக்கிறது!

எங்கே; எங்கள் அனைவரையும் ஒருமுறை வாழ்த்துங்கள்!

புறப்பட்டார் எந்தோழர்—இனி
எதிர்ப்பட்டார் அழிபட்டாரே!

★



அன்புள்ள பொன்முடி,

நாட்கள் பலவற்றிற்குப் பிறகு உன்னைச் சந்திக்கிறேன் கடிதம் மூலம்!

கடல் கடந்த மலாய் நாட்டிலே வாழும் நீ தாயகத்தில் நிகழ்பனவற்றை மடல் மூலம் அறிந்து கொள்ளத் துடிப்பதை உணர்கிறேன்; மிக நன்ருக உணர்கிறேன்.

கூழுக்காக பிறந்த மண்ணைத் துறந்து, அயல் சீமையிலே அயர்வு கண்டு, சளைக்காமல் வியர்வையைப் பெருக்கி வாடுகிருய் நண்பா! இனியும் உன் போன்ருர் வயிறு வளர்ப்பதற்காக மட்டுமே வேறு நாடு செல்வது கூடாது; தகாது; முறையாகாது என்பதை எண்ணி, நமது செல்வம் நமக்கேபயன்படவேண்டுமென்னும் தலையாய கொள்கையைத் தலைமேல் தாங்கி திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே குதித்திருக்கிறது.

"திருச்சி மாநில மாநாட்டில் எடுத்த முடிவுக்கேற்ப நாடு வாழ; நலிவு போக; ஜனநாயகம் ஓங்க; சமதர்மம் தழைக்க; நீதி நிலைபெற; நேர்மை துலங்க தி. மு. கழகத் தோழர்கள் பொதுத் தேர்தலில் பூரிப்போடும் பெருமிதத்தோடும் ஈடுபட உங்கள் ஆதரவை அன்புடன் நாடி வருகின்றனர். உண்மை ஊழியம் புரிய வரும் கழக அபேட்சகர்களுக்கு உள்ளம், உரை, உடல் பொருள் ஆகியவற்ருல் பேருதவி அளித்து வெற்றியைத் தேடித்தர உங்கள் ஒத்துழைப்பை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."

—என்பதாகப் பொதுச்செயலாளர் அவர்கள் அறிக்கை மூலம் தமிழக மாந்தரைக்கேட்டுக் கொண்டிருக்கிருர்!

தமிழ் நாட்டில் தேர்தல் எப்படி நடைபெறும் என்பதைத்தான் முன்னமே நீ அறிந்திருப்பாயே; கூடு விட்டுக் கூடு பாயும் விக்ரமாதித்தனை நிஜமாக்குவதுபோல் கட்சி விட்டுக் கட்சி மாறி வெட்கமின்றி ஓட்டுப் பிச்சைக்கேட்கும் ஓதியமிலார்களுக்கு இந்தத் தேர்தலிலும் பஞ்சமில்லை!

இவர் எல்லை காக்கும் வீரர்; தொல்லைகள் பல கண்டவர்; சொன்ன சொல்லை நிறைவேற்றுதல் இன்றி வேறு செயல்முறை தெரியாதவர்—என்றெல்லாம் கூறப்பட்டவர்கள்; கை இராட்டைக் கட்சியைக் கனவிலும் திரும்பிப் பாரேன் என்று கடுஞ் சபதம் எடுத்துக் கொண்டதாக நடித்தவர்கள்—இவர்களில் பலர் இன்று மானத்தை மறந்து சட்ட சபை நுழைவதற்குத் தயாராகிவிட்டனர்!

காறி உமிழ்ந்த எச்சிலை திரும்பவும் வாயில் எடுத்துப் போட்டுக்கொள்ள எந்த நாகரிகவாதியும் முன் வருவதில்லை. ஆனால் நண்பனே, காமராசரதுகைப் பாவையாக இயங்கி வரும் தமிழ்நாடு காங்கிரஸ் எச்சிலை மட்டுமல்ல; அதோடு ஒட்டிக் கொண்டிருக்கும் கழிவுப் பொருள்களையும் சேர்த்து வாயில் போட்டு குதப்பியபடி திரிந்து கொண்டிருக்கிறது!

இது காங்கிரசின் நிலைமை! காங்கிரசிற்கும் தங்களுக்கும் அதிக வேறுபாடின்றி உலவுகிருர்களே, அவர்கள் பற்றியும் கூறிவிடுகிறேன்!

காங்கிரஸ் என்னும் பாம்பினை அடிக்க கம்யூனிஸ்ட்டு என்னும் கைத்தடியை உபயோகிப்பதாகக் கூறினுர், பெரியார்! ஆனால் இன்றோ கைத்தடியை ஏந்திய கையிலே மகுடியை எடுத்து ஊதி: தானும் ஆடிக் கொண்டிருக்கிருர், பெரியார்!

சரி, அது போகட்டும்; அந்தக் 'கைத்தடியின்' நிலைமை என்னவென்று கேட்கிருயா? நண்பனே! இந்த ஐந்தாண்டுக்குள் உபயோகப்படாமல் இருந்த காரணத்தால் தடி தேய்ந்து விட்டது; அதன் வன்மை அற்றுவிட்டது; திண்மை குறைந்துவிட்டது.

அதுமட்டும்தானு? அந்தத் தடி பாம்பை மட்டும் அடிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை, நண்பா! தவருன திசையிலெல்லாம்; தவருன இலக்குகளைத் தாக்குவதற்காக அந்தத் தடி திருப்பப்படுவது, அந்த இயக்கத்திற்கே மக்கள் மன்றத்திலே இப்போது ஒரு மோசமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

"நாடு வாழ, நலிவுகள் நீங்க ...உங்கள் ஒத்துழைப்பை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கூறுகிறதல்லவா பொதுச் செயலாளர் அறிக்கை! அதற்கு ஜனசக்தி'யின் 'எழுத்தாணி' கேட்கிறது:

"நாடு வாழ தி. மு. க. ஓட்டு கேட்கிறது, மற்றக் கட்சிகளெல்லாம் நாடு சாவதற்கா ஓட்டுக் கேட்கிறது?"

—மந்த மதியினனும் புரிந்து கொள்ளுகிற அளவுக்கு சாதாரண, ஆனால் தெளிவான பதங்களை உபயோகித்து வேண்டுகோள் விடுத்திருக்கிருர், பொதுச் செயலாளர்!

ஆனால் எப்போதும் நேர் வழியைத் தவிர இதர வழிகளைத் தேர்ந்தெடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவர்களோ இதைப் புரிந்து கொள்ளும் வலுவிழந்து காணப்படுகிருர்கள்!

அந்தோ பரிதாபம்! அவர்கள் அறியாமை கண்டு இரங்குவதைத் தவிர வேறு என்ன செய்ய இருக்கிறது?

'ஜனசக்தி'க்காரர்கள் கூட்டம் போட்டால் ஊர்வலம் நடத்தினுல், "புரட்சி ஓங்குக!" என்று கோஷம் எழுப்புகிருர்கள்.

அப்படியானுல் 'புரட்சி ஓங்குக!'—என்று ஒலிக்கும் அந்தக் கோஷம் எந்தப் புரட்சியைக் குறிக்கிறது? எப்படி ஓங்க வேண்டும்—என்று எந்த வழிமுறைகளைக் காட்டுகிறது?

"உலகப் பாட்டாளி மக்களே ஒன்று சேருங்கள்!" — என்று கூக்குரல் எழுப்புகின்ருர்கள். அருமை நண்பா! அப்போது யாராவது எழுந்து, "உலகப் பாட்டாளி மக்களை திரளச் சொல்லுகிறீர்களே; அவர்களை எல்லாம் எந்தத் திடலில் ஒன்று சேரச் சொல்லுகிறீர்கள்? சென்னை ஜிம்கான மைதானத்திலா? அல்லது கான்ரன்ஸ்மித் சவுக்கத்திலா? எந்த இடத்தில்? எந்த நேரத்தில்?"—இப்படிக் கேட்பதில்லை. சாதாரண அறிவு படைத்தவர்கள் அனைவருக்கும் அதன் பொருள் புரியும்; ஆனால் ஏனோ தெரியவில்லை—குருட்டறிவு படைத்தவர்கள் நிலையிலே, குழந்தையைப் போல் பதம் பிரித்து சரியான பொருள் காணுது விழிக்கிருர், 'ஜனசக்தி'யார்!

இன்னும் கேள் நண்பா!

"நீங்கள் நிம்மதியாக வாழ ஓட்டுக் கேட்கிறது தி. மு. க. மற்ற கட்சிகளெல்லாம் ஜனங்களைத் தூங்கவிடாமல் செய்யவா ஓட்டுக்கேட்கிருர்கள்?"

—எழுதுகிறது, 'ஜனசக்தி'!

மற்றக் கட்சிகள் மட்டும் மக்கள் நிம்மதியாக வாழ ஓட்டுக் கேட்கவில்லையா என்று வினு எழுப்புகிறது, அந்த ஏடு!

நண்பா! மாட்டுச் சின்னத்தை ஓட்டுச் சீட்டிலே பொறித்துக் கொண்டவர்களும்தான் மக்கள் மன்றமேறி ஓட்டுக் கேட்கிருர்கள்' அவர்கள் வாக்குகள் பெற்று மீண்டும் பதவிக்கு வரும்போது எப்படித் தோழா இந்த உபகண்டத்துப் பொது மக்கள் இல்லங்களிலே நிம்மதி தவழ முடியும்? அமைதி நிலவ முடியும்?

இரண்டாயிரம் ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் தூய்மையற்ற செயலைத் தொடர்ந்து நடத்துவதற்காக ஓட்டுக் கேட்கிருர்கள் அவர்கள்!

அமைதியாக ரயில் வண்டியிலே பிரயாணம் செய்து கொண்டிருக்கும் பிரஜையின் கபாலத்தில் துப்பாக்கி ரவையைப் பாய்ச்சி; அவன் மூளையைச் சிதற அடிக்கும் வெறிச் செயலை வெற்றிச் செயல் என்று நிரூபிப்பதற்காக வாக்கு பெற வந்திருக்கிருர்கள் அவர்கள்!

தடைபடாத் தடியடிப் பிரயோகம் நடத்த; கண்ணீர் வெடிகளைப் பொழிந்துள்ள அவர்கள் இன்று மன்றமேறியிருக்கின்றனர்!

எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்! பம்பாயில் மராட்டியர்களை வேட்டையாடியதுபோல உங்களையும் வேட்டையாடிக் கொல்லுகிருேம்! குஜராத்திகளைக் கொன்று குவித்ததைப் போல இங்கேயும் பிணமலைகளைக் குவித்துக் காட்டுகிருேம் என்று கூறுவதைப் போல அவர்கள் தேர்தல் பிரச்சாரம் நடந்து வருகிறது.

தோழனே, இந்த நிலைமையில் 'நிம்மதியாக' வாழ—என்று கூறி தி. மு. கழகம் ஓட்டுக் கேட்பதிலே என்ன தவறு இருக்க முடியும்?

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் அடக்குமுறை தர்பாரைத் தடுத்து நிறுத்துவோம், இது கூடாது, அநீதி என்று சட்ட சபையிலே பேரிடியாய் முழங்குவோம்! நாட்டிலே ஓடும் நிரபராதிகளின் இரத்த வெள்ளத்திற்கு அணை போடுவோம்!

—தி. மு. கழகம் குறிப்பிடும் 'நிம்மதி' என்ற வார்த்தைக்கு இந்தப் பொருள்தானே இருக்க முடியும்?

காங்கிரஸ் இயக்கத்தவர்களின் ஏகபோகச் சொத்தாக சட்டசபையை மாற்றுவீர்களேயானுல் அவர்களது திறமையற்ற நிர்வாகத்தால் விஷவாசிகள் விஷம்போல உயர தற்த வாய்ப்பு ஏற்படும்; அதனுல் உங்கள் நிம்மதி கெட்டுவிடும் என்றுகூறுகிருேம் நாம்.

ஆதாரக் கல்வியிலும், குலதர்மக் கல்வித் திட்டத்திலும் பெரு நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கையில் செங்கோல் சிக்குமானுல் உங்கள் வீட்டு குழந்தைகளின் தலையிலே இ

❊ தொடர்ச்சி 8-ம் பக்கம்

சிறு கதை



இன்று மாலை புத்தகத்தில் கூட என் மனம் ஈடுபடவில்லை. சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன். பம்பாய் எனக்குப் புதிது. நான் வந்து ஒரு வாரமாகிறது. என் நண்பன் சிவகுமாரைத் தவிர, நான் இன்னும் இங்கு யாருடனும் நெருங்கிப் பழகவில்லை. சிவகுமார் என் பள்ளித் தோழன். என் மீதும் என்னுடைய எழுத்தின்மீதும் அவனுக்கு அபாரப் பிரேமை. அவன் எனக்கு எழுதியுள்ள கடிதங்களையெல்லாம் தொகுத்தால் அது என் கதைகளுக்கு ஒரு விமர்சனமாகவே அமைந்துவிடும்.

நான் ஒரு வேலை விஷயமாய் பம்பாய் வருகிறேன் என்று எழுதியவுடனேயே, ஓடோடியும் ரயில்வே ஸ்டேஷனுக்கு என்னை வரவேற்க வந்து விட்டான். என்னைப் பார்த்தவுடன்தான் அவன் முகத்தில் எத்துணை குதூகலம்!

"கணேஷ், ஏண்டா உடம்பு இப்படி இளைத்துப் போய் விட்டாய்?" என்றான் என்னைத் தழுவியபடியே.

எனக்கு சிரிப்புத்தான் வந்தது. உண்மை என்னவென்றால், நான் சமீப காலததில் மிகவும் உப்பிப்போய் இருந்தேன். அன்பு, ஒரு வேடிக்கையான சக்திதான்!

"சரி சரி, வா!" என்று என் பெட்டியை நான் தூக்கவிடாமல் அவனே தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

காரில் ஏறி உட்கார்ந்தவுடன்தான், அவனுக்குத் திருமணமாகி விட்டது என்ற உண்மை என் நினைவுக்கு வந்தது. அதைப் பற்றிக் கேட்டால், நான் அவன் திருமணத்திற்கு வராததை நினைவுபடுத்திக் கொண்டு கோபித்துக் கொள்வான் என்பது எனக்குத் தெரியும். ஆகவே மௌனமாகவே இருந்து விட்டேன்.

"நாம், இப்பொழுது எங்கே போகிறோம்...?" என்றேன்.

"இதென்னடா அசட்டுக் கேள்வி? வீட்டுக்குத்தான் போகிறோம்," என்றான்.

"ரூம் பார்த்து வைப்பதற்காகத்தானே உனக்கு முன்னால் கடிதம் எழுதினேன்."

"கணேஷ், நீ கதை எழுதுகிறாயே தவிர, உனக்கு உலகமே தெரியாது. பம்பாயை என்ன, உன்னுடைய திருவாரூர் என்று எண்ணிவிட்டாயா?" என்று என்னைப் பார்த்துச் சிரித்தான்.

"பிறகு?" என்றேன்.

"பிறகென்ன, எங்கள் வீட்டு மாடியறையில் கொஞ்ச நாள் தங்கியிரு. நல்ல இடம் பார்த்துப் பிறகு வேண்டுமானால் மாற்றிக்கொண்டு விடலாம்," என்றான்.

"குழந்தை ஏதாவது......?" என்று இழுத்தேன்.

"ஏனப்பா அவ்வளவு அவசரம்? திருமண ஆண்டு நிறைவைக் குழந்தையோடுதான் கொண்டாட வேண்டுமோ!" என்றான்.

அதற்குள் கார் "செந்தமிழ் இல்ல"த்தின் முன் நின்றது.

அவன் மனைவிக்கு என்னை அறிமுகப்படுத்தினான். அதில்தான் எத்தனை பரிவும் பாசமும்!

"இவள்தான் சரோ; என் மனைவி; உன் தங்கை!—இவன்தான் கணேஷ்; என் நண்பன்—எழுத்தாளன்"

சரோஜாவின் அன்புச் சுருக்கம்தான் சரோ!

சரோ—அன்பு, அழகு, அடக்கம் ஆகியவற்றின் கூட்டுச் சரக்கு. களை சொட்டும் அந்த முகத்தைப் பார்த்தவுடனேயே, சரோவிடம் எனக்கு ஒரு மரியாதை தோன்றியது.

மாடியில் எல்லா வசதிகளையும் எனக்கு அறையில் அமைத்துக் கொடுத்திருந்தான். அன்று வேலையில்லாமல் போகவே, அறையிலேயே அமர்ந்து விட்டேன். எனக்குப் பிடித்தமான மாம், ஹார்டி, ஷா ஆகியோருடைய நூலிலும் என்னுடைய கவனம் செல்லவில்லை. சிவகுமாரும் இரவுதான் அலுவலகத்திலிருந்து திரும்பி வருவான். வெளியே உலாவப் போகும் எண்ணமும் தோன்றவில்லை. ஊர் நினைவு—'ஹோம் சிக்'—ஒரு வேளை என் நிலைக்குக் காரணமாயிருந்திருக்கலாம்!

நாற்காலியில் சாய்ந்தபடியே வெறிச்சென்ற வான வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

எங்கிருந்தோ காற்றில் கலந்து வந்த கீதம் என் கவனத்தைக் கவர்ந்தது. ஆம், ராகம்கூட எனக்குப் பிடித்தமான ராகம்தான்—பிலகரி!

வீணையிலிருந்து எழுந்த அந்த இசையோடு, இனிமையான குரலொன்றும் சேர்ந்து ஒலித்தது!

"இத்தனை நாள்
என்ன செய்தாய்?
இன்பத் தமிழைப்பாடி
அன்பை வளர்த்திடாமல்"

மெய் மறந்தேன்; அப்பப்பா, இந்த இசைக்குத்தான் எத்தனை காந்த சக்தி! அதோடு தமிழும், தமிழை சொற்சுவை, பொருட்சுவை குன்றாமல் இசைக்கும் இனிய சாரீரமும் சேர்ந்து விட்டால்......பண்ணும் பாட்டும் சேர்ந்து, இந்தத் தமிழ் மண்ணை பரவசப்படுத்தி நின்ற அந்த மூவேந்தரின் காலத்திற்கே சென்றுவிட்டேனோ—என்று எண்ணச் செய்தது.

அதைவிட ஆச்சரியம், பாட்டைப் பாடிக் கொண்டிருந்தவள் சரோ! அறையை விட்டுப் படிக்கட்டுகளின் வழியாக இறங்கினேன்.

உள்ளே ஹாலில் பட்டுக் கம்பளத்தின்மீது அமர்ந்து, குரலினிமையையும் வீணை கானத்தையும், தமிழ்த் தேனில் குழைத்து இசை வெள்ளத்தை ஓடவிட்டுக் கொண்டிருந்தாள் சரோஜா!

சரோ இவ்வளவு இனிமையாகப் பாடுவாளா? என்ன லாவகம், என்ன குழைவு, என்ன கற்பனை!

அவள் பாடி முடித்தாள்.

"சபாஷ்!" என்று உரத்துக் கத்தி விட்டேன். என் குரலைக் கேட்டவுடன் அவள் வீணையைக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றாள்.

உணர்ச்சி வசப்பட்டு நான் செய்த தவறினை அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

"மன்னித்து விடுங்கள். உங்கள் பாட்டைக் கேட்டு ஏற்பட்ட மகிழ்ச்சியில்......"—தடுமாறினேன்; குரல் நடுங்கியது.

"பரவாயில்லை; இதில் மன்னிப்பதற்கு ஒன்றுமேயில்லையே..." என்று சரோ சொன்னபோது, என் அச்சம் நீங்கி, ஆறுதல் அடைந்தேன்.

"சரி சரி, நீங்கள் பாடுங்கள்; நான் சற்று தூரம் வெளியே போய் விட்டு வருகிறேன்." என்று கிளம்பினேன்.

"அவசர வேலையேதும் இல்லையானால், சற்று உட்கார்ந்து கேளுங்களேன்" என்று கூறி விட்டு வீணையின்முன் மீண்டும் அமர்ந்தாள்.

நான் சிந்திக்க நேரமில்லை; அவள் விரல்கள் சுருதி கூட்டின.

"உங்களுக்கு எந்த ராகம் பிடிக்கும்?" என்றாள்.

"மோகனம்" என்று கூறி விட்டு அருகிலுள்ள சோபாவில் அமர்ந்தேன்.

"மௌனம் ஏன் கொண்டீரய்யா?" என்ற சாகித்தியத்தை, அபூர்வமாகப் பாடினாள்.

மோகனத்தைக் கேட்டு மட்டும் நான் ரசிக்கவில்லை; அந்த மோகனத்தைப் பார்த்தும் ரசித்தேன்.

பாட்டு முடிந்தது!

"ரொம்பப் பிரமாதம் போங்கள்......பாட்டின் பாவம் உணர்ந்து, சங்கீதத்திற்காகச் சாகித்தியத்தைக் கொலை செய்யாமல், பொருளுணர்ந்து உங்களைப்போல் பாடுபவர்கள் மிகவும் குறைவு" என்றேன்; உண்மையும் அதுதான்.

சரோ முகம் 'குப்' பென்று சிவந்தது!

"சிவகுமாருக்குப் பிடித்த ராகம் எது?" என்றேன்.

"இவ்வளவு நாள் பழகியும் உங்கள் நண்பரைப் பற்றி ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்களே! சங்கீத விஷயத்தில் உங்கள் நண்பர் பெரிய ஔரங்கசீப்!" என்றாள்.

படிக்கின்ற காலத்தில் சிவகுமாரும் நானும் இசையில் அவ்வளவு பற்றுக் கொண்டிருக்கவில்லை. பிறகென்னவோ எனக்கு இசையில் பற்று ஏற்பட்டு, அதன் உபாசகனாகவே மாறி விட்டேன். சிவகுமாரின் நிலை, சங்கீதத்தைப் பொறுத்த மட்டில் வெறுப்புணர்ச்சியாகியிருப்பதை சரோஜா சொன்ன பிறகுதான் உணர்ந்தேன்.

"வேறென்ன ராகம் உங்களுக்குப் பிடிக்கும்?" என்றாள்.

"உங்களுக்குப் பிடித்தமான ராகமொன்றையே பாடுங்கள்; கேட்கிறேன்." என்றேன்.

காம்போதியில், 'மரகத வல்லிம்' என்ற கீர்த்தனையை வாசித்தாள் — வாய்ப் பாட்டு சேரவில்லை.

"வீணையோடு சேர்ந்து பாடியிருக்கலாமே...!" என்றேன்.

"காம்போதி ராகப் பாட்டான இந்தப் பாடல் எனக்குப் பிடித்தாலும், தமிழிசை அல்லாத பாடல்களை வாயால் உச்சரித்துப் பாடுவதில்லையென்று ஒரு வைராக்கியம் கொண்டிருக்கிறேன்," என்றாள்.

கலையும், அதை ஒழுங்குபடுத்தும் கொள்கையும் கொண்ட சரோவை மனைவியாகப் பெற்ற சிவகுமாரின் அதிர்ஷ்டத்தை மனதுக்குள்ளாகவே பாராட்டிக் கொண்டேன்.

அதற்கு மேலும் உரையாடலை வளர்த்துக் கொண்டு போவது சரியல்ல என எண்ணிய நான் வெளியே புறப்பட்டேன்; சரோவின் கருவிழிகள் என்னை விழுங்கி விடுவது போல் பார்த்தன.

* * *

இரவு எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை; இசை எனக்கு அமைதியளித்தது என்று நான் எண்ணியது பொய்யாயிற்று.

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.,

மாருக என் உள்ளத்தில் ஒரு சலனம் தோன்றிவிட்டது.

சரோவின் எழில் முகம் அடிக்கடி என் மனக்கண் முன் தோன்றி முறுவலித்துக் கொண்டிருந்தது. பிலகரி அடிக்கடி மானசீகமாக என் செவிகளில் வந்து மோதி சிந்தனையைக் குழப்பியது. மோகனம் எங்கோ என்னை இழுத்துச் சென்று கொண்டிருந்தது. காம்போதியை எண்ணினுலே காந்தள் விரல்கள் கம்பிகளின் மீது லாவகமாக நர்த்தனமிடும் காட்சிதான் கண்முன் தோன்றியது.

நண்பனின் பெருந்தன்மையை நம்பிக்கைத் துரோகமாக்கி விடாதே என்று மனச்சான்று எங்கோ ஒரு மூலையிலிருந்து கூக்குரலிட்டது.

கணவனை ஔரங்கசீப்போடு ஒப்பிட்டு என்னிடம் கூறுவானேன்? அவர்களுடைய வாழ்க்கையில் எங்கோ அபஸ்வரம் பேசுகிறது; ஆனுல் நண்பனுகிய என்னுடைய கடமை...?

புத்தகங்களை யெல்லாம் புரட்டினேன். மனம் வேகமாகப் 'படபட' வென்று அடித்துக் கொண்டது.

சிகரெட் முடிவில்லாமல் புகைந்து கொண்டிருந்தது!

மெதுவாக மாடிப் படிகளில் ஓசைப்படுத்தாமல் இறங்கினேன்.

அறையில் சிவகுமாரும் சரோவும் ஏதோ 'குசு குசு' வென்று பேசியபின் 'கல கல' வென்று நகைத்தார்கள். அந்தப் பெண்ணின் சிரிப்பில்கூட ராகங்கள் கலந்து ஒலித்தன.

வேதனையும் வெட்கமும் பிடுங்கித் தின்ன மாடியில் போய்ப் படுத்துக் கொண்டேன். எப்பொழுது தூங்கினேன் என்று எனக்கே தெரியாது. கண் விழித்தபொழுது கதிரவனின் கிரணங்கள் என் கண்களைக் குத்தின.

* * *

மறுநாள் மாலை நான் சிவகுமார் வற்புறுத்தியதன் பேரில் அவனுடன் கடற்கரைக்கு உலாவப் புறப்பட்டேன். அன்று அவனுக்கு விடுமுறை. சரோவையும் எங்களுடன் வரும்படி அழைத்தான். மாதர் சங்கத்தில் நடக்கின்ற கச்சேரி யொன்றைக் கேட்பதற்காக அவள் போய்விட்டாள்.

இசைச் செல்வியை மனைவியாகப் பெற்றும், இசையில் நாட்டமற்று இருக்கும் சிவகுமாரின் போக்கை அறிந்து கொள்ள ஆவல் தூண்டிற்று.

ரேடியோவில் யாரோ ஒரு வித்வான் தோடியை ஆலாபனம் செய்து கொண்டிருந்தார். பேச்சைத் துவக்குவதற்கு அது நல்ல சந்தர்ப்பம் அளித்தது.

"தோடி ஆலாபனம், எப்படி?" என்றேன்.

சிவகுமார் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு ஆரம்பித்தான்: "இசைக்கு மனிதனை உயர்த்தும் ஆற்றலும் உண்டு; அவனை மிருக நிலைக்கு விரட்டும் தன்மையும் உண்டு!" என்றுன்.

என் உள்ளத்தை அவன் வார்த்தைகள் 'சுருக்' கென்று தைத்தது. என் உடல் வியர்த்துக் கொட்டியது. என்னைப் பற்றி தவருக ஏதாவது சரோ ......அப்படியொன்றும் தவருகவும் நான் நடந்து கொள்ளவில்லையே......என் மனதின் ஆழத்தில் நடக்கும் போராட்டங்களை என் செயல்கள் ஏதாவது வெளிப்படுத்தி விட்டனவா ....?

"சங்கீதத்தை நான் வெறுக்கிறேன்; ஆனுல் ஒரு சமயம் எனக்கு அதனிடத்தில் இருந்த பக்தி..." என்ற பீடிகையோடு ஆரம்பித்தான்.

"சரோவை நான் திருமணம் செய்து கொள்ளுமுன் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவள் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சி யுள்ளவள். அவள் காதலின் விளைவாகவே நான் சங்கீதம் கற்று நல்ல ரசிகனும் ஆனேன். ஆனுல், அந்தச் சங்கீதமே எங்கள் காதலுக்கும் 'கால'னுயிற்று. அவள் உறவினன் ஒருவன், நல்ல இசை வல்லவன்—இசை ஆசிரியனும் கூட. அவனுடைய இசைத் திறனில் மனதைப் பறிகொடுத்த அவள், என்னுடைய காதலுக்குத் துரோகம் செய்துவிட்டாள்......அவளும் அவனும் மிருக வாழ்க்கை வாழ்ந்தார்கள்...அந்த ஆபாசத்தைப் பார்த்து நான் அணு அணுவாகச் செத்தேன்.... அவலத்தின் எல்லையை எட்டிப் பிடித்த என் வாழ்க்கைக்குப் புத்துயிர் அளித்தவள் சரோ ... ஆனுல் சரோவின் கலைத்திறன்—இசைச் செல்வம் புனிதமானதாக இருக்கவே ஆசைப்படுகிறேன். இசையை நான் வெறுக்காமல் துதி பாடினுல், சரோவின் இசைத் திறனும் செம்மையுறலாம்... ...ஆனுல் அதுவே எங்கள் வாழ்க்கையில் சுருதி பேதத்தை விளைவித்து விடக் கூடாது...என்னுடைய முதல் அனுபவம் சரோவிற்குத் தெரியாதே தவிர, அதிலிருந்து நான் கற்ற படிப்பினையை அவளிடம் வலியுறுத்தி வந்திருக்கிறேன்..."

சிவகுமாரின் கதை உண்மையா, அல்லது எனக்காகத் தயாரிக்கப்பட்ட நீதிக்கதையா என்று புரியாமல் என் மனம் குழம்பியது. இருந்தாலும் "ஆமாம்; வீட்டிலுள்ள வீணை கூட புழுதி படிந்து அப்படியே இருக்கிறதே!" என்றேன்.

சிவகுமார் என்னைப் பார்த்து ஒரு கேலிச் சிரிப்பு சிரித்தான். "நேற்று உனக்கு இசையமுது படைத்ததை சரோ என்னிடம் சொன்னுள்," என்றுன்.

என் தலை சுழன்றது.

"வீணையை விற்றுவிட அவளே முடிவு செய்து விட்டாள்......"

"காரணம்...?"—யந்திரம் போல் கேட்டேன்.

"நான் வலியுறுத்தி வந்த உண்மையை அனுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிருள்."

நான் "கோ" வென்று அழுது விட்டேன்.

"கணேஷ், நீ ஒரு முட்டாள், எதற்காக அழுகிருய்? மனப் போராட்டம் இல்லாத வாழ்க்கையே இல்லை."

"சிவகுமார், நான் முட்டாள் மட்டுமல்ல..."

"போதும் கணேஷ்...எழுத்தாளர்கள் எதையும் பொறுமையாக நிதானிக்க வேண்டும்......வாழ்க்கையின் அனுபவத்தை வடித்தெடுத்துக் கதையாக்கினுல்..."—எதுவும் நடக்காததுபோல் அவன் நிதானமாகப் பேசினுன்.

இருவரும் வீட்டை நோக்கிப் புறப்பட்டோம். வீட்டில் நுழைந்தவுடன் உள்ளேயிருந்து இன்னிசை கேட்டது. சரோதான் வீணையுடன் பாடிக் கொண்டிருந்தாள்.

ஆனுல் இப்பொழுது பிலகரியும் மோகனமும் அவள் இசைக்கவில்லை......சகானவை ஜீவன் ததும்பப் பாடிக் கொண்டிருந்தாள்! ●

★ கம்யூனிஸ்ட்டுகள் இவர்கள்தான்! ★

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தங்களது உண்மையான ஊழியன் யார்; எதிரி யார்—என்பதைத் தீர்மானிக்க பொது மக்கள் அனைவரும் தயாராகி வருகின்றனர்!

இந்த நிலையில் கொள்கைகளை மட்டுமே மோதவிட்டு தங்கள் சக்தியினை நிர்ணயித்துக் கொள்ள வகையற்ற 'சிலதுகள்' ஈனத்தனமான செயல்களிலே ஈடுபட முனைந்திருக்கின்றன!

தூத்துக்குடியிலே கம்யூனிஸ்டுகள் தங்களுக்கே உரித்தான பயங்கரச் செயல்களை இப்போது எதிர்க் கட்சியான தி. மு. கழக வீரர்கள் மீதே திருப்பி யிருக்கின்றனர்.

தூத்துக்குடி தி. மு. க. தோழர் சிவசாமியின்மீது அபாண்டமான பழியையும் சுமத்திடத் தயங்கவில்லை, அவர்கள்!

இருந்தும் தேசிய ஏடுகள் அங்கு நடந்த சம்பவங்களுக்குத் தவருன தலைப்புகள் தந்து, கம்யூனிஸ்டுகளை தி. மு. க. வினர் வெட்டினர்—என்ற தவருன செய்தியுடன், தங்கள் பிரச்சாரத்தைத் துவக்கியிருக்கின்றன!

அதுகுறித்து தூத்துக்குடி நகர தி. மு. க. செயலாளர் தோழர் ஏ. ஜோசப் தரும் தகவலை இங்கே தருகிறோம்:

"கடந்த 15—1—57 பகல் 2 மணி சுமாருக்கு, நண்பர் தாளமுத்து, (தி. மு. க.) கே. வி. கே. சாமி வழக்கு சம்பந்தமான சாட்சிகளைப் பார்க்கத் தனிமையில் சென்று கொண்டிருந்தபோது, சில கம்யூனிஸ்டுகள் அவரை அடித்துக் காயப்படுத்தியது மட்டுமல்லாமல், அவரது தங்கை தோழியர் பாக்கியம் அம்மையாரையும் இன்னெரு இடத்தில் அடித்து, அவரது சங்கிலியை அறுத்துத் துன்புறுத்தியிருக்கிருர்கள்.

இதைக் கேள்வியுற்ற சில தோழர்கள் கூட்டமாகச் சென்று கம்யூனிஸ்டுச் சங்கம் ஒன்றைத் தாக்கியதுடன் நீதிராசன் என்ற ஒருவரை பல இடங்களில் வெட்டியிருக்கிருர்கள்.

ஆனுல், கம்யூனிஸ்டுகள் தோழர் சிவசாமிதான் முன்னின்று அவரை வெட்டச் சொன்னதாகப் பொய்யான தகவலொன்றைப் போலீஸ் அதிகாரியிடம் கொடுத்து விட்டனர்.

தோழர் தாளமுத்துவும் அவரது தங்கையும் தாக்கப்பட்ட செய்தியை போலீசாரிடம் தெரியப்படுத்தி தோழர் சிவசாமி அவர்கள் போலீஸ் ஸ்டேஷனிலேயே வெகு நேரம் இருந்தார். இந்த நேரத்தில்தான் நீதிராஜன் வெட்டப்பட்டது. எனவே சிவசாமியின்மீது சுமத்தப்பட்ட பழி அபாண்டமானது என்பதை போலீஸ் அதிகாரிகளே தெரிந்து கொண்டனர்.

அன்றிரவு சில கம்யூனிஸ்டுகள், வடக்கூர் தி. மு. கழகத்திற்குச் சென்று படங்களை யெல்லாம் உடைத்து, கொடிகளையும் அறுத்து, அட்டூழியங்கள் செய்ததோடல்லாமல், மக்கள் மறுமலர்ச்சி மன்றம் சென்று, அங்கும் தாக்குதல் நடத்திவிட்டு, தாளமுத்துவின் தங்கை பாக்கியம் அம்மையாரின் வீடுசென்று, பூட்டப்பட்டிருந்த அவ்வீட்டின் மேல் கற்களை வீசிக் கலாட்டா செய்திருக்கின்றனர். இந்த விவரமும் போலீசாருக்கு உடனே தெரிவிக்கப்பட்டது.

மேலும் அன்றிரவே சுமார் 1 மணிக்கு ஏராளமான கம்யூனிஸ்டுகள் டுவிபுரம் என்ற பகுதியிலுள்ள கழக உட்கிளைக்குச் சென்று, அண்ணு, கே. வி. கே. சாமி—ஆகியோரின் படங்களை நொறுக்கி, கற்களை வீசி ஓடுகளையெல்லாம் உடைத்து, கழகத்தின் முன்பக்கமுள்ள தட்டிக் கதவை அரிவாளால் வெட்டி, கழகத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ள 'போர்டை'யும் வெட்டி வெளியிலே வீசி, கழகக் கொடிகளை அறுத்து, பல பகுதிகளிலும் தூக்கி எறிந்தது மட்டுமின்றி, கழகத்தின் உட்புகுந்து அங்கிருந்த 3 உண்டியல் பெட்டிகளையும் உடைத்து அதிலுள்ள பணத்தையும், மேசையைத் திறந்து அதில் வைக்கப் பட்டிருந்த 'மைக்', மற்றும் செலவு வகைக்காக வைக்கப் பட்டிருந்த ரூ. 57—6—3-யும் கொள்ளையடித்துக் கொண்டு ஓடி விட்டனர்.

இந்த அளவுக்குக் கம்யூனிஸ்டுகள் அட்டூழியங்களிலும் அக்கிரமச் செயல்களிலும் ஈடுபட்டு வருகிற போதும்கூட நாங்கள் அமைதியாகவே இருந்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்." ●

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

[காட்சி 25-தொடர்ச்சி]

பொ: இறந்தவரை எழுப்பும் சக்தி இன்னமும் காதலுக்கு ஏற்படவில்லை. என் செய்வேன்? காதலா, உங்கள் கண்களில் பழைய பாசம் காட்டுங்கள். உங்கள் நாக்குக்கு பழைய காதல் மொழிகளை மட்டும் உச்சரிக்கக் கட்டளை பிறப்பியுங்கள். இதயத்தில் பழைய இன்ப ஓட்டம் ஓடச் சொல்லுங்கள். ஆமாம்; நடந்தது நடந்ததே! இறந்தவர் இறந்தவரே! இனி, வெப்பம் அவர் உடலை வருத்தாது. குளிர் அவரை வாட்டாது. அழைத்தால் பேச மாட்டார். கேலி செய்தால் பதில் பேச மாட்டார். மீண்டும் வாள் கொண்டு தாக்கினாலும் இரத்தம் சொட்டவிட மாட்டார். காலம் திரும்பியோடுமானால் — கதிரவனும், திங்களும் நம் சொற்படி கேட்குமானால்- இறந்தவரை எழுப்பலாம். காதலா, கருணையுள்ள வார்த்தை ஒன்றுகூட இல்லையா உங்களிடம்? தங்கள் அன்பு முத்தம் இனி எனக்கு கிடைக்கவே கிடைக்காதா?

ஆள: முத்தமா? இரத்தம் வடித்த உனக்கா? இல்லை— ஒருக்காலும் இல்லை!

பொ: ஐயோ, பெண்களிடம் இந்த உலகம் இரக்கமே காட்டாது போலும். ஆடவர், எங்களை பலை மூகட்டுக்குக் கூட்டிச் செல்கிறார்கள். ஆனால் அங்கிருந்து கீழே விழும்பொழுது கவலையற்றுத் திரும்பி வந்து விடுகிறார்கள்.

ஆள: பலைமுகட்டிலிருந்து விழுந்து மாண்டானே மன்னன், அவனிடமே போ.

பொ: உம், போகிறேன்— ஆனால் இன்றிரவு எனக்குக் காட்டிய கருணையைப்போல வேறு எவரிடமும் காட்டி விடாதீர்கள்.

ஆள: கொலை புரிந்தவருக்குக் கருணையா காட்ட வேண்டும்?

பொ: (கொஞ்சதூரம் நடந்து வந்து, வெறி பிடித்தவள் சிரிப்பது போல் சிரித்து) கொலை யென்றா கூறுகிறீர்கள்? கொலை இன்னும் பசியோடிருக்கிறது — இன்னும் தீனி கேட்டுக் கொண்டுதானிருக்கிறது. அதன் தம்பி சாவோ, திருப்திப் படவே இல்லை. தனக்கு இன்னும் ஆகாரம் கிடைக்காமல் மாளிகையை விட்டுப் போவதில்லை யென்று ஒட்டாரம் பேசுகிறான்! சாவுக்கு இங்கிருந்து இன்னுமொரு விருந்து நடத்துகிறேன்! விடிவதற்குள் இந்த மாளிகையில் ஒரு பெரும் புயல் வீசத்தான் போகிறது! நிலவின் முகம் பயத்தால் வெளுத்து விட்டது! அசைந்திடும் காற்றிலேகூட அச்சம் பரவி யிருக்கிறது! நட்சத்திரங்கள் கண்ணீர் வடிக்கின்றன! நன்றாக அழட்டும்! இந்த உலகையே கண்ணீர் ஏரியாக மாற்றட்டும்! அது கூட போதாது; கண்ணீர்க் கடலாகவே பெருகட்டும்! (ஆளவந்தானைப் பார்த்துப் பைத்தியம் கொண்டவளைப் போல) கேட்டீர்களா, குதிரைகளின் குளம்படி சத்தத்தை! குதிரைப் படை. அரண்மனைக்குக் காவலிருக்கிறது! தலைவன் பழிக்குப்பழி விழித்துக் கொண்டான்! (இடி இடிக்கிறது) அவரது வேட்டை நாய்கள் கிளம்பி விட்டன. இந்தக் கொலை ஒரு பெரிய அழிவைக் கொண்டு வரப் போகிறது! (மின்னல் தோன்றுகிறது)

ஆள: போ, போய் விடு!

(பொன்மேனியாள் வெளியேறுகிறாள். போகும்பொழுது திரும்பி ஒரு முறை அவனைப் பார்க்கிறாள். போய் விடுகிறாள். அவள் முகத்தில் எந்த விதமான உணர்ச்சி மாற்றமும் தெரியவில்லை.

ஆளவந்தான் நிலை தடுமாறி நிற்கிறான். வெறி பிடித்தவன் போலப் பேசுகிறான்.)

ஆள: அவள் வாழ்வு, என் வாழ்வு — எல்லாம் இதோ என் காலடியில் வீழ்ந்து பாழாகி விட்டன. கண்ணியமான முறையில் பழிக்குப் பழி வாங்க எண்ணினேன். ஆனால் பயங்கரமான படுகொலை தன் இரத்தச் சுவடுகளை அந்தக்கண்ணியத்தின் இடத்திலே பதித்து விட்டது. அவள் கொன்றாள். ஐயவோ! ஆமாம்... எனக்காகவே கொன்றாள். அவள் காதலுக்கு எல்லையில்லை! காதலுக்காகவே கொலை புரிந்தாள் அந்தக் கட்டழகி......கொடியவனாக உன்னிடம் நடந்து விட்டேன். திரும்பி வா, என்னிடம் வந்து விடு!

(ஆளவந்தான் அவளைத் தொடர்ந்து போகிறான். அப்போது சிப்பாய்கள் ஓடி வரும் காலடியோசை கேட்கிறது. ஒளி விளக்குகள் இங்குமங்கும் வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்றன.)

ஐயோ! இதென்ன — விளக்குகளோடு வீரர்கள் தேடுகின்றனர். ஐயோ, என் அன்புச் சித்திரத்தை அவர்கள் கண்டு பிடித்து விடுவார்களே!

(காலடியோசைகள் நெருங்குகின்றன.)

கண்ணே, பொன்னே — காலமாகிவிடவில்லை. வந்துவிடு... தப்பிவிடலாம்!

(அப்போது, பொன்மேனியாள், சிப்பாய்களுடன் திரும்பி வருகிறாள். கரத்தை உயர்த்திக் காட்டுகிறாள்.)

பொ: இதோ, இவன்தான் என் காவலரைக் கொன்றவன்!

(வீரர்கள் சென்று ஆளவந்தானைச் சூழ்ந்து கொள்கின்றனர்.)

காட்சி..26

[நீதி மன்றத்திற்கு வெளியே கூட்டம் கூட்டமாக மக்கள் திரண்டு நின்று பேசிக்கொள்கின்றனர்.]

முதல்வன்: அறவாழிக்கு இன்றுதான் விடுதலை.

இரண்டாமவன்: உரக்கப் பேசாதீர் — சதிகாரர் கூட்டத்தில் உம்மையும் ஒருவராகச் சேர்த்துவிடப் போகிறார்கள். மன்னன் கொடியவனானாலும், கொலை தண்டனைக்குரிய குற்றம் தானே?

முத: கொடுமையை அழிக்க கொலைவாளினை எடுத்திருக்கிறான்.

இர: இதில் விசித்திரமான செய்தி — கொலைவாளினைத் தான் காணோமாம்.

முத: அந்த நள்ளிரவில், ராணிதான் கொலைகாரனைக் காட்டினாளாம்!

இர: ஓடவில்லையாம். ஒளியவில்லையாம். திகைப்போடு நின்றானும்.

முத: பயம் அவன் கால்களை ஓடாமல் கட்டி யிருக்கக் கூடும்.

இர: மெய்காக்க வந்தவன், மன்னன் உயிரையே குடித்து விட்டான்.

(அப்போது, பழிதீர்த்தான் குதிரையை விட்டிறங்கி ஓடோடி வருகிறான்.)

ப: மன்னன் இறந்து விட்டானா?

முத: இறக்கவில்லை, கொன்று விட்டான்!

ப: கொன்றுவிட்டானா— கொலைக் குற்றம் யார்மீது சாட்டப்பட்டுள்ளது?

இர: குற்றவாளிமீது!

ப: குற்றவாளியாக யாரப்பா கைது செய்யப்பட்டுள்ளது?

முத: மன்னரைக் கொன்றதாகச் சந்தேகப் பட்டவனைத் தான்!

ப: அந்தக்குற்றவாளியின் பெயரைத் தான் கேட்கிறேன்.

இர: பெயரா..?

முத: அதுவா— அவன் பெயர் ஆளவந்தான் புதிதாக மன்னரின் மெய் பாதுகாப்பாளனாக நியமிக்கப்பட்டவன்.

ப: ஆம், எனக்குத் தெரியும்— (தனிமையில்) அவன் என்னிடம் ஏதேதோ கூறினானே! அந்தக் கயவனை நேரில் கண்டவுடன் அவன் மனதில் தங்கியிருந்த காதல் மயக்கத் தத்துவங்கள் ஓட்டம் பிடித்திருக்கும்—பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கியிருக்கும்.

(கூடியிருந்தோரைப் பார்த்துப் பேசினான்.)

ப: எப்படி அவனை இழுத்துச் சென்றார்கள்?

முத: கையில் விலங்கிட்டு, கைதியை இழுத்துச் செல்வதுபோல!

ப: யார் அவனைப் பிடித்தது?

இர: ஏன், யார் கரம் அவன் மீது முதல் முதல் பட்டதோ, அந்த வீரன்தான் பிடித்திருப்பான்.

முத: அதையல்ல அவர் கேட்பது—ராணிதான் அவனைக் கண்டுபிடித்தாள்.

ப: கொலை செய்தான் என்பதற்கு அடையாளம்?

முத: கத்தி — ஆனால் அதைத் தான் காணவில்லையாம்! தேடுகிறார்கள் — தேடுகிறார்கள்—இன்னும் கிடைக்கவில்லை!

இர: ஒருவேளை அதையும் சேர்த்து மன்னன் சுடுகாட்டில் வைத்து எரித்து விட்டார்களோ, என்னவோ?

ப: (தனிமையில்) அந்த இடந்தான் ஆச்சரியம் தருகிறது. என் எண்ணம் ஈடேறி விட்டது. இனி ஆளவந்தானைக் காப்பாற்றி, ஆளவந்தானாக ஆக்க வேண்டும். நீதி மன்றம் செல்கிறேன். வாதிடுகிறேன்.

(தொடரும்)

தில்லை வில்லாளன் எம். ஏ.,

நன்றி

தமிழ்த் திருநாளாம் பொங்கல் புதுநாளன்று வாழ்த்துக்கள் அனுப்பிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

மு. கருணாநிதி.

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வளையாபதி; எளம்பிள்ளை.

(?) பாம்புக்குப் பால் வார்ப்பவர்களும் இருக்கிறார்களா?

இருக்கிறார்கள்; திராவிட கழகத் தோழர்கள் காங்கிரசை ஆதரிப்பதை என்னவென்று நினைக்கிறீர்கள்?

(?) ஒரு கட்சி வெற்றிபெற பண பலமும், படை பலமும் மட்டும் இருந்தால் போதுமா?

இரண்டிற்கும் மேலாக கொள்கை பலம் இருக்க வேண்டும், நண்பரே!

வே. கதிரேசன்; மதுரை.

(?) பெரியார் — விநோபா சந்திப்பு எப்படிப்பட்டது?

நிச்சயம் அது ஆச்சாரியார் — பெரியார் சந்திப்பைப்போல் பயங்கரமானதல்ல!

மு. க. வண்ணன்;
கவண்டம்பட்டி.

(?) காங்கிரஸ் கொடிதான் அழகாய் இருக்கிறது; மற்ற கொடிகள் அழகாய் இல்லை—என்று கக்கன் சொல்கிறாரே?

நல்லவேளை; 'பூங்கொடிகள்'தான் அழகாய் இருக்கிறதென்று அவைகளைத் தேடிப் போகாமலிருந்தாரே!

ஏ. ஹக்கீம்; அரகண்டநல்லூர்.

(?) குருஷேவ்; புல்கானின்; சூ என் லாய் — ஆகியோரின் நெற்றியிலே சிகப்புக் குங்குமம் வைக்கப்பட்டது எதைக் குறிக்கிறது?

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை இனி இந்த நாட்டுக்குத் தேவையில்லை யென்று அவர்களிடம் கொடுத்து அனுப்பியதைத்தான் அது குறிக்கிறதோ, என்னவோ!

வி. ராமலிங்கம்; அவிசாவெள்ள.

(?) வரப்போகும் தேர்தலில் தி. மு. க. சார்பாக ஒரே ஒரு 'சீட்டு' மட்டும் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?

அந்த ஒரு சீட்டும் காங்கிரசை மடக்கும் துருப்புச் சீட்டாக இருக்குமென்பதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்ட ஆசைப்படுகிறோம்!

கே. மணிவண்ணன்;
பாண்டிச்சேரி.

(?) தேர்தல் என்பது அரசியல் சூதாட்டமா?

அப்படியானால் ராமநாதபுரம் சேதுபதிக்கல்லவா முதலிடம் கிடைத்திருக்க வேண்டும்!

எஸ். சந்திரசேகரன்; பாலக்கரை.

(?) இந்தத் தேர்தலில் ஆச்சாரியார் எங்கு நிற்கிறார்?

சட்டசபையின் கோல்லைப்புறத்தில் கால் கடுக்க அவர் நீண்ட நாட்களாக நின்று கொண்டிருக்கிறாரே!

கே. வேணுகோபால்; கோவை.

(?) சென்ற தேர்தலில் நீங்கள் காமராசரை எதிர்த்த பெரியார் இப்போது ஆதரிப்பானேன்?

அப்போது அவர் 'பச்சையாக' இருக்கவில்லையோ, என்னவோ!

"முரசொலி"

இலங்கை...
உள் நாடு

ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

விழும்; அறிவு கெடும்; அதனால் உங்கள் இல்லம் நிம்மதி இழக்கும் என்று கூறுகிறோம், நாம்!

நாளை ஆச்சாரியாரின் வர்ணாஸ்ரமத் திட்டத்திற்கு ஒப்பான வேறொரு திட்டம் ஓட்டெடுப்புக்கு வரலாம். அந்தச் சூதுத் திட்டம் ஒரே ஓட்டினால் தோற்றுப் போக வேண்டிய நிலைமை உருவாகலாம். அந்த நேரம் பொறுப்பற்றவர்கள் சட்டசபையில் இருப்பார்களேயானால் அவர்கள் தந்திரமாக வராமல் இருந்து பிற்போக்குத் திட்டம் வெற்றிபெற உதவுவார்கள். பிறகு உங்கள் எதிர்காலம் நிம்மதியாக இருக்காது. இன்று நீங்கள் ஏமாந்தால் பிறகு இன்னும் ஐந்தாண்டு காலத்துக்கு நீங்கள் அதைத் திருத்திக் கொள்ள முடியாது—என்று பறைசாற்றுகிறோம், நாம்!

—அதனால்தான் நிம்மதி நிலவுவதை எதிர்ப்பவர்கள் சார்பாக வாதிட வந்திருக்கிறது, 'ஜனசக்தி' ஏடு!

நண்பரே; வாக்கெடுப்பிற்கு ஒரு திங்கள் இருபதற்குள்ளாகவே இங்கு இவர்களது போக்கிலே இவ்வளவு நெளிவும் வளைவும்! வரப்போகும் நாட்களில் இவர்கள் எப்படியெல்லாம் மாறப் போகிறார்களோ தெரியவில்லை!

இன்னொன்று கூற மறந்துவிட்டேனே!

அடுத்த வாரம் தமிழகத்திற்கு பண்டித நேரு வரப் போகிறார்!

சென்னை, திருவல்லிக்கேணியிலே சங்கு கணேசன் என்னும் பெயரினர்; சுட்ட சங்கினும் வெளுத்த உளத்தினர் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறாரே; அவரைச் சந்தித்து; உங்கள் கோரிக்கைகளைக் கவனித்து தக்கன செய்கிறேன்—என்று ஆறுதல் அளித்து, ஆவன செய்வதற்குத்தான் அவர் வருகிறாரா என்று கேட்டுவிடாதே! அதற்கெல்லாம் அவருக்கு மனம் எங்கே இருக்கப்போகிறது!

மக்களைப் பற்றியே கவலைப்படாமல் தேர்தல் மாட்டைப் பற்றியே சிந்தை அணு ஒவ்வொன்றையும் செலவிட்டு உலா வந்து கொண்டிருப்பவர் அவர்!

அறுபத்தி யொன்று வயதுடைய பெரியார், உடம்பின் அணுவெல்லாம் காங்கிரசிற்கே என்று வாழ்ந்த உத்தமர் உயிர் விடப் போகிறாரே — என்று அவர் ஏன் கவலைப்படப் போகிறார்?

அவர் வருவது திரு சங்கு கணேசனைச் சந்திப்பதற்காக அல்ல; நண்பனே! சங்கெடுத்து ஊதி சவக்குழி நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரசிற்கு ஓட்டு கேட்பதற்காக!

இரு முறை புயலால் வாடினோம்; புழுப்போலத் துடித்தோம்; துவண்டோம் – அன்று வரவில்லை அவர்! கேரளத்து உப்பங்கழிகளிடையே உல்லாசப் படகு மிதக்க விட்டபடி காற்று வாங்கிக் கொண்டிருந்தார்!

அரியலூர் விபத்திலே நூற்றுக் கணக்கானவர்களைப் பலி கொடுத்து; கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தோம்– அப்போது கூட அவருக்குத் தமிழகத்தைத் திரும்பிப்பார்த்து, நேரில் வந்து ஆறுதல் கூறிட நேரமில்லை!

ஆனால் இதற்கிடையில் ஒரு முறை அவர் இங்கு வந்தார்.

எப்போது?

மக்கள் மனம் கலங்கியிருந்த நேரத்தில் அல்ல!

எப்படி வாழ்வு தொடங்கப் போகிறோம்? எவ்விதம் உயிர் வைத்துக் கொண்டிருக்கப் போகிறோம்?—என்று சோழ மண்டலத்து மக்கள் பெருமூச்சைத் துணையாகக் கொண்டு வாழ்ந்த நேரத்தில் அல்ல!

சென்ற ஜில்லா போர்டு தேர்தலின்போது, ரஷ்ய விஜயத்தில், தான் பெற்ற புகழ்மாலைகளுடன் அவர் வந்திருந்தார்; இப்போது பொதுத் தேர்தலுக்காக வருகிறார்!

மாறி மாறி வரும் பருவக் காற்றுபோல் தேர்தல் சமயங்களிலே மட்டும் வருகிறார் பஞ்சசீலப் பண்டிதர்!

அருமை நண்பா! தமிழக மாந்தர் அனைவரும் ஒரு குரலில் கேட்கிறார்கள்—

புயலால் | அழிவு அழுகுரல்

ரயில் விபத்தால் | பிணமலை இரத்த வெள்ளம்

ஆறுதல் அளிக்க அப்போது நேரு பண்டிதர் வரவில்லை.

இப்போது ஓட்டு கேட்க மட்டும் ஓடோடி வருகிறார்.

நல்லோரே! கூறுங்கள்!

நீதி இதுதானா?

—தோழனே! வடநாட்டார் நமக்கு வேறு நாட்டார் என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்ள இதைவிட வேறென்ன வேண்டும்?

அடுத்த வாரம் சந்திக்கிறேன்.

இங்ஙனம்,

உன் அன்புத் தோழன்.

வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது!

சினிமா டைரி-1957

நட்சத்திரங்கள் பக்கத்திற்கு பக்கம் அலங்கரிக்கும் நூதன டைரி இது ஒன்றே.

அபிமான நட்சத்திரங்களின் கார் நெ: போன் நெ; விலாசம் நிறம் மற்றும் நடித்த படங்கள் பற்றிய குறிப்பு.

புரொட்யூசர்கள், டைரக்டர்கள், கதை, வசன கர்த்தாக்கள், போட்டோவுடன் இவர்களைப் பற்றிய குறிப்பும் விலாசமும்.

பேசும்பட ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை வெளிவந்துள்ள தமிழ்ப்படங்களின் ஜாபிதா நீங்கள் அறிய வேண்டிய அம்சம்.

விலை ரூ. 2—0—0. தபால் சிலவு 0—12—0

(இலங்கைக்கு மட்டும் வி. பி. பி. உண்டு)
ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்

:: சுதர்சன் பப்ளிகேசன்ஸ் ::

20, கல்லுக்காரன் தெரு. சென்னை—4.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம் 4—128 மவுண்ரோடு சென்னை-6. தமிழ்நாடு.